**2025 அக்டோபர் மாதம் 30 – ஆம் தேதி வியாழக்கிழமை**

**கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி**

**எம் .சி .ஓ .பி. நெம்பர் : 212/2023**

MCOP No.: 212/2023 – வீருத்தாய் PW1 30.10.2025

க/பெ.பால்கண்ணன்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, 2ம் எதிர்மனுதார் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

விபத்தில் இறந்துபோனவர் எனது கணவர். எனது கணவர் என்ன தொழில் செய்து வந்தார் என்றால் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுநராக வேலை பார்த்து வந்தார். எனது கணவருக்கு எந்த தேதியில், எங்கு வைத்து விபத்து ஏற்பட்டது என்றால் 19.02.2023ம் தேதி தாராபுரத்திற்கும் ஒட்டன்சத்திரத்திற்கும் இடையில் வைத்து விபத்து ஏற்பட்டது. விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. விபத்திற்கு பின்னர் எனது கணவரை எங்கு வைத்து பார்த்தேன் என்றால் தாராபுரம் அரசு மருத்துவமனையில் வைத்து பார்த்தேன். விபத்து சம்பந்தமாக காவல்நிலையத்தில் யார் புகார் கொடுத்தார் என்றால் நான் தான் புகார் கொடுத்தேன். அந்த விபத்து எப்படி நடந்தது என்று எனக்கு யார் தகவல் சொன்னார்கள் என்றால் காவல்நிலையத்தில் இருந்து தகவல் சொன்னார்கள். நான் சொல்வதுபோல் விபத்து சம்பந்தமாக நான் புகார் கொடுக்கவில்லை என்றும், வழக்கிற்காக நான் புகார் கொடுத்தேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் கணவர் மீது மோதிய வாகனத்தின் பதிவு எண் எனக்கு தெரியாது. என் கணவர் மீது அரசு பேருந்து மோதிவிட்டது. நான் சொல்வதுபோல் அரசு பேருந்து என்கணவர் மீது நேரடியாக மோதவில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.1 ஆவணத்தில் எனது கணவர் மீது TN 33 BQ 6670 என்ற ரோந்து வாகனம் மீது மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது கணவர் போடி டிப்போவில் வேலை

செய்தார். விபத்து சமயத்தில் எனது கணவர் பணியிலிருந்து TN 57 N 2459 என்ற பேருந்து பழுதடைந்து இருந்தபோது, அதை சரிசெய்து விட்டு, அந்த பேருந்தின் ஓட்டுநரும், நடத்துநரும் பழுதடைந்த பேருந்தின் முன்னால் அமர்ந்திருந்தார்கள் என்றும், மேற்படி பேருந்திற்கு பாதுகாப்பாக தான் TN 33 BQ 6670 என்ற ரோந்து வாகனம் நிறுத்தப்பட்டிருந்தது என்றும், ரோந்து வாகனம் சாலை போக்குவரத்து விதிகளுக்கு புறம்பாக மையப்பகுதியில் வீல் ஸ்டாப்பர் இல்லாமல் நிறுத்தப்பட்டிருந்ததால், அதே ரோட்டில் அதே திசையில் வந்த TN 33 N 3394 என்ற வாகனம் மோதியதால் மேற்படி TN 33 BQ 6670 என்ற ரோந்து வாகனம் பழுதாகி நின்றிருந்த அரசு பேருந்தின்மீது மோதி, அந்த பேருந்து ஓட்டுநர், நடத்துநர் மீது மோதி விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரிதான். விபத்து சமயத்தில் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட அரசு பேருந்து எனது கணவர் மீது நேரடியாக மோதி விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி விபத்தில் எனது கணவர் மீது வாகனம் மோதி விபத்து ஏற்படுவதற்கு காரணம் இரண்டு வாகனங்களும் வீல் ஸ்டாப்பர் இல்லாமல் கட்டுப்பாட்டை இழந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது கணவர் பணியிலிருந்த பழுதாகியிருந்த அரசு பேருந்தின் நிர்வாகத்தையும், ரோந்து வாகனத்தின் ஓட்டுநர், உரிமையாளர், காப்பீட்டு நிறுவனம் ஆகியவற்றை கட்சிச் சேர்க்காததால் என்னுடைய மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. மேற்படி பழுதடைந்த அரசு பேருந்தையும், ரோந்து வாகனத்தை கட்சிச் சேர்த்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதால் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. எனது கணவர் மீது மோதியது அவர் பணியிலிருந்த அரசு பேருந்து என்பதால் நான் மோட்டார் வாகன விபத்து இழப்பீடு சட்டத்தில் இழப்பீடு கோர இயலாது என்றால் சரியல்ல. நான் மேற்படி விபத்து சம்பந்தமாக இழப்பீடு கோர

வேண்டும் என்றால் தொழிலாளர் நலச்சட்டதின் கீழ் தான் இழப்பீடு கோர முடியும் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் எனது கணவர் ரூ.30,000/- க்கும் மேல் மாத வருமானம் பெற்றுக்கொண்டிருந்தார். அவர் பணியில் சேர்ந்து 7 1/2 வருடங்கள் ஆகிறது. அவர் மேல் நிர்வாக ரீதியாக நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. விபத்தில் எனது கணவர் இறந்துவிட்டதால் அதற்கான நிர்வாக பணப்பலன்களை வாங்கிவிட்டேனா என்றால் வாங்கவில்லை. நான் வாரிசு அடிப்படையில் வேலை வாய்ப்பு கோரி மனுத்தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். விபத்து சம்பந்தமான குற்ற இறுதி அறிக்கை, பார்வை மகஜர், மாதிரி வரைபடம் ஆகியவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. விபத்து சம்பந்தமான உண்மைத்தன்மைகள் நீதிமன்றத்திற்கு தெரியக்கூடாது என்பதற்காக ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீட்டுத் தொகை அதிகம் என்றும், 2ம் எதிர்மனுதாரர் இழப்பீட்டு தொகை வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. அவசிய கட்சிக்காரர்களை கட்சிச் சேர்க்காத காரணத்திற்காகவும், தொழிலாளர் நலச்சட்டத்தின் கீழ் மனுத்தாக்கல் செய்ய வேண்டியதாலும், இந்த மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 30.10.2025 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR Digitally signed by SANKAR Date: 2025.10.30 18:49:38 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி (FAC), தேனி.
30.10.2025